# RECORD OF DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | OS 33 of 2022 | **PW - 1** | **:** | Cross |
| **Name** | சண்முகம் | **Father Name** | **:** | சின்னசாமி |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 03.02.2026 administered by District Munsif, Uthangarai.

துவக்க நேரம் - 11.44 AM

2 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:

1. எங்கள் குடும்பத்தின் மொத்த சொத்து எத்தனை ஏக்கர் என்றால் 15 ஏக்கர். இதில் கிரையம் பெற்ற சொத்து எத்தனை ஏக்கர் என்றால் அனைத்தும் பூர்விக சொத்துக்கள் தான். சின்னசாமிக்கு எத்தனை வாரிசுகள் என்றால் மூன்று நபர்கள் சண்முகம், வரதம்மாள், கல்பனா ஆகும். தற்போது என்னிடம் காட்டப்படும் 24.11.2021 தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணம் தான் நாங்கள் மொரப்பூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்த ஆவணம் என்று சொன்னால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை ஆவணம் **பி.வா.சா.ஆ. 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி பாகப்பிரிவினை ஆவணம் எழுதும் சமயத்தில் சின்னசாமி உயிரோடு இருந்தாரா என்றால் இருந்தார். அந்த பாகப்பிரிவினை ஆவணத்தில் சின்னசாமிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் அனைத்தையும் குறிப்பிட்டு பாகம் பிரிக்கப்பட்டது என்றால் இல்லை. அந்த பாகப்பிரிவினை ஆவணத்தில் பாகம் பிரிக்கப்படாத சொத்துக்கள் உள்ளது என்று ஏதாவது குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அந்த பாகப்பிரிவினை ஆவணத்தில் இந்த தாவா சொத்து எனக்கும், 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும் பாத்தியப்பட்ட சொத்து என்று ஏதாவது குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்து மேற்படி பாகப்பிரிவினையில் காட்டப்படாததற்கு காரணம் என்னவென்றால் அந்த சொத்து எனது அப்பா அவருடைய ஜீவனத்திற்காக வைத்துக் கொள்வதாக கூறினார். தாவா சொத்து மேற்படி பாகப்பிரிவினைக்கு முன்பாகவே எனது அப்பா இரண்டாம் பிரதிவாதிக்கு தான செட்டில்மெண்ட் எழுதி வைத்துவிட்டார் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. அவ்வாறு தான செட்டில்மெண்ட் எழுதி ஆறு மாதங்கள் கழிந்த பின்பு தான் மேற்படி பாகப்பிரிவினை

ஏற்படுத்தப்பட்டது என்றால் அவ்வாறு தான் உள்ளது ஆனால் அது எனக்கு முன்பு தெரியாது.

2. பாகப்பிரிவினையில் எனக்கு பாகம் ஒதுக்கப்பட்ட சொத்துக்களுக்கு தாவா சொத்தின் வழியாக தான் நான் செல்ல வேண்டும் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தில் 2-ஆம் பிரதிவாதியிடம் எனக்கு வழி விட வேண்டும் என்று கேட்டேன் அவர் மறுத்து விட்டார் என்று சொன்னால் சரிதான். அவ்வாறு நான் வழி கேட்டு இரண்டாம் பிரதிவாதி மறுத்த சமயத்தில் எனது அப்பா சின்னசாமி உயிரோடு இருந்தார் என்று சொன்னால் சரிதான். அவரையும் அழைத்து வைத்து இரண்டாம் பிரதிவாதியிடம் வழி கேட்டோம் அப்போதும் 2-ஆம் பிரதிவாதி வழி விடவில்லை என்று சொன்னால் சரிதான். பாகப்பிரிவினை ஆவணம் ஏற்பட்டு எவ்வளவு காலம் கழித்து அவர் வழி விட மாட்டேன் என்று கூறினார் என்றால் சுமார் 4 மாதம் கழித்து தாவா சொத்தை நான் ஓட்டினேன் அப்போது ஓட்டக்கூடாது என்றும் அதில் வழியும் செல்லக்கூடாது என்றும் தடுத்தார். மேற்படி பாகப்பிரிவினை ஆவணத்தில் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு சொத்து எதுவும் பாகமாக ஒதுக்கப்படவில்லை என்று சொன்னால் ஆமாம் பணமாக கொடுத்து விட்டோம். பாகப்பிரிவினை ஆவணத்தில் ரூபாய். 18,70,000 மதிப்பிலான சொத்து எனக்கு பாகமாக ஒதுக்கப்பட்டதாக காட்டப்பட்டுள்ளது அதுபோல் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டது என்றால் பத்திரம் எழுதுவதற்காக 5000 ரூபாய் மட்டும் குறிப்பிட்டு எழுதப்பட்டது நாங்கள் கொடுத்த தொகை முழுவதும் அதில் எழுதவில்லை. எவ்வளவு தொகை அவர்களுக்கு கொடுக்கப்பட்டது என்றால் ரூபாய் 2 லட்சம் கொடுக்கப்பட்டது. அவ்வாறு ரூபாய் இரண்டு லட்சம் கொடுத்த விவரத்தை தாவாவில் சொல்லி உள்ளேனா என்றால் இல்லை. 3. நாங்கள் ரூபாய் 2 லட்சம் கொடுத்ததாக சொல்வது தவறு பத்திரம் எழுதுவதற்காக ரூபாய் 5000 குறிப்பிட்டு எழுதப்பட்டது இரண்டாம் பிரதிவாதிக்கு ஏற்கனவே சொத்து கொடுக்கப்பட்டதால் அவருக்கு பணம் எதுவும் கொடுக்காமல் தான் கையெழுத்து வாங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து ஏற்கனவே 2 ஆம் பிரதிவாதிக்கு கொடுத்து விட்டதாக கூறி அவரை அழைத்துச் சென்று பாகப்பிரிவினையில் கையொப்பம் பெற்றுக்கொண்டு தற்போது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எங்கள் பாகப்பிரிவினை ஆவணத்தில் மீதம் சொத்துக்கள் உள்ளது என்று கூறியோ அல்லது தாவா சொத்தை பொது சொத்தாக வைக்கப்பட்டுள்ளதாக கூறிய பாகபத்திரம் எழுதப்படாத நிலையில் தாவா சொத்தில் நான் உரிமைக்கு வர முடியாது என்று

சொன்னால் சரியல்ல. பாகப்பிரிவினை ஆவணத்தில் கண்ட சொத்துக்களை மட்டும் தான் ஏக குடும்பமாக அனுபவித்து வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. உண்மையில் தாவா சொத்தை எனது தந்தையின் ஜீவனத்திற்காக வைத்துக் கொண்டார் என்று இருந்தால் அதை பாகப்பிரிவினை ஆவணத்திலேயே குறிப்பிட்டு எழுதி இருக்க முடியும் அது 2ஆம் பிரதிவாதிக்கு ஏற்கனவே கொடுக்கப்பட்டு விட்டதால்தான் அவ்வாறு எழுதப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. பாகப்பிரிவினைக்கு பின்னிட்டு இரண்டாம் பிரதிவாதிக்கு தானமாக கொடுக்கப்பட்ட தாவா சொத்தில் வழி கேட்டு அவர் மறுத்துவிட்டதால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

4. மேற்படி பாகப்பிரிவினையில் எனக்கு பாகமாக வந்த சொத்துக்கள் பொறுத்து எனது குடும்பத்திற்குள் மீண்டும் ஒரு பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என்று சொன்னால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் 22.04.2022 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் நாங்கள் ஏற்படுத்திய பாகப்பிரிவினை பத்திரம் என்று சொன்னால் சரிதான் அது **பி.வா.சா.ஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நாங்கள் 2021 இல் பாகப்பிரிவினை ஏற்படுத்திக் கொண்ட 10 நாட்களுக்குள் வா.சா.ஆ 2, 3 ஆவணங்களை பெற்றுள்ளேன் எனவே அப்பொழுதே தாவா சொத்து குறித்த தான செட்டில்மெண்ட் பற்றி எனக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான். பாகப்பிரிவினைக்கு அடுத்த தினமே தாவா சொத்தை குறித்து இரண்டாம் பிரதிவாதி பெயரில் உள்ள தான செட்டில்மெண்ட் ஆவணமான வா.சா.ஆ 1 ஆவணத்தை நான் நகல் பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பாகப்பிரிவினை ஏற்படுத்தும் சமயத்திலேயே இரண்டாம் பிரதிவாதி பெயரில் உள்ள தான செட்டில்மெண்ட் ஆவணம் குறித்து எனக்கு நன்கு தெரிந்து அதை நான் ஒப்புக்கொண்டதாலேயே அவருக்கு பாகப்பிரிவினையில் சொத்து எதுவும் ஒதுக்கப்படாமல் பாகம் பிரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. பாகப்பிரிவினை ஏற்படுத்தும் சமயத்தில் யார் யார் சாட்சிகளாக இருந்தார்கள் என்றால் மோகன் மற்றும் செல்வமணி ஆவர்கள். தாவா சொத்தின் செக்குபந்தி வடக்கு பக்கம் மொட்டை என்கிற வேங்கையா கவுண்டர், தெற்கு பக்கம் கோவிந்தசாமி தகப்பனார் பெயர் மோளைய கவுண்டர், மேற்கு பக்கமும் கோவிந்தசாமி நிலம், கிழக்கு பக்கம் சிதம்பரம் தகப்பனார் பெயர் நடேசன். தாவா சொத்தின் தெற்கு புறத்தில் எனக்கு பாகப்பிரிவினையில் ஒதுக்கிய சொத்து உள்ளது அந்த விவரத்தை தாவாவில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் இல்லை. தெற்கு புறம் கோவிந்தசாமி என்று நான் செக்குப்பந்தி சொல்லி உள்ளது தவறா என்றால் அது சரிதான் அதையும் தாண்டி

தான் எனது நிலம் உள்ளது.  என்னுடைய தாவாவின் சொத்து விவரத்திலேயே இந்த தான செட்டில்மெண்ட் ஆவணத்திற்கு உட்பட்டது மேற்படி தான செட்டில்மெண்ட்ஸ் சொத்திற்கு மாமுலாய் போகும் வண்டி வண்டி பாதையில் போக வர உமக்கும் பாத்தியும் உண்டு என்று சொல்லி எழுதப்பட்டுள்ளது என்று சொல்லி நான் ஒப்புக் கொண்டுள்ளேன் என்று சொன்னால் அந்த ஆவணத்தில் அவ்வாறு எழுதப்பட்டுள்ளது. தாவா சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ள மாமுலாய் போகும் வண்டி வழி பாதை எவ்வளவு அகலம் எவ்வளவு நீளம் என்று சொன்னால் 13 அடி அகலம், நீளம் தெரியவில்லை அது கோவிந்தசாமியின் நிலம் வரை செல்கிறதா என்றால் ஆமாம். என்னுடைய பாக சொத்திற்கும் மேற்படி வழியில் தான் செல்ல வேண்டும் என்று சொன்னால் சரிதான் அவ்வாறு மேற்படி வழி எனது பாகப்பிரிவினையில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

**முடிவு நேரம் –12.24 PM**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-XXXXX

District Munsif(FAC),
Uthangarai.